RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd223S15

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

# Ancient Culture-Hospitality

## தொன்மைப் பண்பாடு- விருந்தோம்பல்

P. Usha [a,*]

[a] Department of Tamil, St. Josephs College for Women, Kangayam Road, Tiruppur-641604, Tamil Nadu, India.

*Corresponding author Email: rosylotus41@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S15

Received: 13-04-2022; Revised: 05-07-2022; Accepted: 11-07-2022; Published: 19-08-2022

**Abstract:** High ethical cultures are common all over the world. People's worship shines through the rituals, customs, beliefs, artistic sensibilities, righteous worship ethics, etc. The factor that differentiates people from other large groups is their cultural elements. It is our culture to live as if we belong to others and not to ourselves, and to live by sharing, even if it is nectar to others. In ancient Tamil literature, the cultural methods of Tamil can be known. It is the culture of Tamils to speak simply to the simple. Hospitality is an integral part of life. Being hospitable to strangers is paramount. Today, people in rural areas can be seen as "hospitable" people who happily entertain a new guest whom they don't know. It can be seen that this trait is a habit that goes back to time immemorial. As written in the literature, the people have been following this tradition till today as a way of showing the hospitable nature of ancient Tamil life. At the core of our culture is hospitality.

**Keywords:** Hospitality, Culture, Worship, Nature

**Language:** **Tamil**

## முன்னுரை

உயரிய நெறிமுறைகளாய பண்பாடுகள் உலகம் முழுவதும் பொதுவானது ஆகும். மாந்தர்தம் பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள், கலையுணர்வுகள், நீதி வழிப்பாட்டு நெறிமுறைகள் முதலானவற்றால் அவர் தம் வழிப்பாடு மிளிரும். மக்களை மாக்களிலிருந்து வேறுப்படுத்திக்காட்டுவது அவர் தம் பண்பாட்டுக் கூறுகளேயாகும். தமக்கெனவாழாது பிறர்க்குரியவராக வாழ்தலும், அமிர்தமே கிடைத்தாலும் பிறர்க்கு கொடுத்து வாழ்தலும் நமது பண்பாடு ஆகும். பழந்தமிழ் இலக்கியத்தில் தமிழரின் பண்பாடு சார்ந்த முறைகள் அறிய முடிகின்றது. எளியோரிடத்து எளிமையாகப் பேசுவதுதமிழரின் பண்பாடு ஆகும். விருந்தோம்பல் இவ்வாழ்வியலோடு ஒன்றிவிட்ட ஒன்றாகும். முன் பின் அறிமுகம் இல்லாதவர்க்கு விருந்தோம்பி மகிழும் பண்பு முதன்மையானது ஆகும். இன்று கிராமப்புறங்களில் இருக்கும் மக்கள் அறிமுகமில்லாத புதிய விருந்தாளியிடம் மகிழ்வோடு உபசரிக்கும் விருந்தோம்பல் பண்பைக் காணமுடிகிறது (Devanayapavanar, 2017). இப்பண்பு தொன்றுத் தொட்டு இருந்து வரும்பழக்கமாகவே இருப்பதைக் காணமுடிகிறது.

## விருந்தும் மருந்தும்

சாவா மருந்தெனினும் விருந்தினைரப் புறக்கணித்து உண்ணாத மாண்பை வாழ்வியல் நூலான வள்ளுவம் காட்டுகின்றது.

‘விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று’

என்று கூறும் வள்ளுவம் விருந்தோம்பலின் சிறப்பைத் தனியே ஒரு அதிகாரம் வாயிலாகத் சுட்டுவது எண்ணத்தக்கது (Gowmarishwari, 2004). இக்கருத்தினையே புறநானூறும்.

'.............. இந்திரர்

அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்

தமியரும் உண்டலும் இலரே'

எனக் காட்டும். புதிய விருந்தினரின் வரவைக் காட்டும் காக்கையின் ஒலியைக் குறித்துப் பாடிய புலவரைப் பண்டையோர் காக்கை பாடினியார் என்றே அழைத்தனர் (Gurunathan, 2003).

விருந்து வரக்கரைந்த காக்கையது பலியே என்பது பழந்தமிழ்ப்பாடலின் தொடராகும். விருந்து வருவதைக் குறித்து நன்னிமித்தமாகக் காக்கை கரைந்தைப் பாடிய பெரிதும் எண்ணுதற்குரியதாகும் (Nagarajan, 2004).

## வன்புல நாட்டினர்க்கு விருந்து

மன்னன் விருந்தோம்பும் பண்பிலே சிறந்து விளங்கியதைச் சங்க இலக்கியங்கள் பலவும் போற்றி உரைக்கின்றன. அரிய பொருள்களை வந்த விருந்தினார் மகிழ்ந்து கொடுத்த செய்தியைப் புறநானூறு பின்வரும் கூறும்:

"யாணர்த் தாகி அரிநர்

கீழ்மடைக் கொண்ட வாளையும் உழவர்,

படைமிளிர்ந் திட்ட யாமையும் மறைநவர்

கரும்பிற் கொண்ட தேனும்பெருந்துறை

நீர்தரு மகளிர் குற்ற குவளையும்

வன்புலக் கேளிர்க்கு வருவிந்து அயரும்

மென்புல வைப்பின் நன்னாட்டுப் பொருந" (Gurunathan, 2003)

## வழியனுப்பும் நெறி

விருந்தினரை மகிழ்வோடு வரவேற்கும் பண்னை பொருநராற்றுப்படை விரித்துரைக்கின்றது. மகிழ்வுவரவேற்று. உபசரித்து அவர்கள் செல்லும்போது ஏழடிப் நடந்து வழியனுப்ப வேண்டும் என்பதை.' காலின் ஏழடிபின் சென்று, கோல் இன் தாறு களைந்து ஏறு என்று ஏற்ப என்றுரைப்பது மன்னனின் விருந்தோபும் பண்னைப் காட்டும் (Gowmarishwari, 2004). இன்று மிகப் பெரிய உணவு விடுதிகள் கலைய வணிக நோக்கில் வளர்த்து வருகின்றன. தம் விடுதிக்கு வரும் வாடிக்கையாளர்களை இன்முகத்தோடு உபசரிக்கும் பணியினை மேற்கொள்ளும் பணியாளர் ஆனால் பழந்தமிழக வரலாற்றுச் சமூகச் சூழலில் விருந்தினை பணியினைக் கலையாகவும், வாழ்வியற் பண்பாகவும் கொண்டு மக்கள் விளங்கியதையே இவ்விலக்கயங்கள் காட்டுகின்றன.

## இல்லற மாண்பு

இல்லறத்தின் மாண்பே விருந்தோம்புவதுதான் என்றார் வள்ளுவப் பெருந்தகை "விருந்தோம்பி இல்வாழ்வது விருந்தோம்பி வேளாண்மை செய்தற்காகத்தான் என்பார் வள்ளுவர்" (Gowmarishwari, 2004). "விருந்தினர் வந்தால் இல்லறத்தார் இருக்கைய விட்டு எழுந்து வரவேற்க வேண்டும் என்று நாலடி விதி வகுக்கும்' (Vidhwan venkataraman, 2018). அறிமுகமாகாத புதியவர் என்ற நிலையிலேயே விருந்து என்னும் சொல் முதன் முதலில் குறித்தது. காலப்போக்கில் விருந்து என்னும் சொல் அறிமுகமானவரையே குறிக்கத் தொடங்கியது" உற்றார். உறவினரேயன்றிப் புலவர், உண்டி, உறையுள் தந்து விருந்தோம்பியதை ஆற்றுப்படை'10 நூல்கள் விளங்குவதைப் போலவே அக்காலத்திலும் பெண்கள் அக்கலையில் ஈடுபாடு ஆர்வத்தோடு விளங்கியன இலக்கியங்கள் காட்டும்.

"அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்

முல்லை சான்ற கற்பின் மெல்லியற் குறுமகள்

விருந்தயர் விருப்பினள் வருத்தும்' (Gurunathan, 2003)

என்றும் தலைவியின விருந்தயர் மாண்பு வியந்து கூறப்படுகின்றது.

'விருத்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்

விருந்தும் அன்றி விழைவன யாவையே' (Gnanasambanthan, 2000)

என்று கம்பரும் பெண்டிர் விருந்தினரை அன்போடு பேணுவதைக் காட்டுவார்

பொருநராற்றுப்படையில் கரிகாலன் இரவலரை விருந்தோம்பிய செய்தி பலவாறாகப் பாராட்டப் பெற்றுள்ளது. பொற்காலத்தில் நறுமணம் வீசும் தேறதலை நாள் தோறும் வழங்கி இரவலரை விருந்தோம் வாரி வழங்கித் தீர்ந்து போன செய்தியையும் புறநானூறு

'வரகுந்தினையும் உள்ளவை எல்லாம்

இரவன் மாக்கள் உணக்கொள்த் தீர்ந்தென' எனச்சுட்டுகிறார்.

## சமூகவியல் பண்பு

விருந்தோம்பல் என்னும் பண்பு சமுதாய அமைப்பில் தொடக்கத்தில் வாழ்வியலோடு இனணந்திருந்த பாங்கும் பின்னர் அப்பண்பு அறிவியலின் ஒரு கூறாகவே கருதப்பட்ட நெறியும் காலந்தோறும் தோன்றிய இலக்கியங்களால் புலனாகின்றன. திருவள்ளுவர் இந்தப் பண்பினை உளவியலோடும் சார்த்தியுரைக்கும் திறன் எண்ணி மகிழ்தற்குரிய தாய் விளங்குகின்றது.

'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து' (Gowmarishwari, 2004)

என்னும் குறளில் முகம் திரியும் நிலையிலேயே விருந்தினர் வாடுவதைக் காட்டுவார்.

## முடிவுரை

உலகத்தின் பொதுமைப் பண்புகளுள் ஒன்றான விருந்தோம்பல் மானுடவாழ்வின் நேயத்தைக் காட்டும் பெற்றியது. வாழ்வியல் நெறிகளுள் தலையாய அறவியல் நெறியாகப் பிற்காலத்தே மாறியது. சமூகவியல் நோக்கில் நெறியாகப் பிற்காலத்தே மாறியது. சமூகவியல் நோக்கில் இவ்விருந்தோம்பும் பண்பு ஒவ்வொரு நாட்டிலும் மானுட நேய இழையாகத் தோன்றுகின்றது. உலகளாவிய ஒருமைப்பாடு மிக்க பண்பாக 'விருந்தோம்பும் பண்பு இன்றும் விளங்குவதே இதன் சிறப்பைக் காட்டும். பழந்தமிழர் வாழ்வின் விருந்தோம்பல் பண்பின்நெறியைப் புலப்படுத்தும் விதமாக இலக்கிய நூல்கள் கூறுவதுப்போல மக்களும் இதைப்பின்பற்றி இன்று வரை கடைப்பிடித்து வாழ்ந்து வருகின்றனர். நம் பண்பாடுகளில் தலைச்சிறந்தது விருந்தோம்பல் ஆகும்.

## References

Devanayapavanar, (2017) Pandaith Thamizhar Nagarigamum Panpaadum, Poombukar Publication, Chennai, India.

Gnanasambanthan A. S., (2000) Kambaramayanam Yuththa Kaandam, Gangai Puththaga Nilaiyam, Chennai, India.

Gowmarishwari, S., (2004) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India

Gurunathan, V., (2003) Puranaanooru Moolamum Uraiyum, Vadivel Pathippagam, Thanjavur, India

Nagarajan, V., (2004) Kurunthogai moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Puliyur Kesikan, (2010) Naladiyar, Saradha Pathippagam, Chennai, India

Vidhwan venkataraman, H., (2018) Nattrinai Moolamum Uraiyum, U.Ve.Sa library, Chennai, India

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

P. Usha, Ancient Culture-Hospitality, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 24-27. DOI: https://doi.org/10.54392/ijmrd223S15